**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
(~~குற்றவியல் நடைமுறை~~ [illegible] ~~இன் கீழ்~~)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120306

1. District மாவட்டம்: இராமநாதபுரம் PS காவல்நிலையம்: ஊ.ஒ.த.க பிரிவு Year ஆண்டு: 2025 FIR No. மு.த.அ. எண்: 04 Date நாள்: 03.03.2025

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 03.03.2025 Date to நாள் வரை :
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 17.25 hrs Time to நேரம் வரை : 21.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.03.2025 Time நேரம் : 22.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ மேற்கு
Beat Number முறைக் காவல் எண் :
(b) Address முகவரி : உட்கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர். நரக் கட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை, இராமநாதபுரம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கு. இராமச்சந்திரன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முருகேசன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/25
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர்
(g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு இராமநாதபுரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. கோ. ஜெகபாண்டி .46/25 த/பெ கோவிந்தன். உதவி கோட்டப் பொறியாளர், இராமநாதபுரம் உட்கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர், நரக்கட்டுப்பாடு
2. திரு. தை ஜெயசக்ரவர்த்தி (தனிநபர்), இராமநாதபுரம் உட்கோட்ட பொறியாளர் இராமநாதபுரம் நரகட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை, இராமநாதபுரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— இல்லை — .

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, If required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரியின் விபரம்:

1. திரு.கோ.ரெங்கபாண்டி, வயது 46/2025 த/பெ கோவிந்தன், உதவி கோட்டப்பொறியாளர், இராமநாதபுரம் உட்கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர், தரக்கட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை, இராமநாதபுரம்.
2. திரு.ஜெ.ஜெயசக்ரவர்த்தி, வயது 39/2025 த/பெ ஜெயபால், தற்காலிக கணிணி இயக்குபவர் (தனிநபர்), இராமநாதபுரம் உட்கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர், தரக்கட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை, இராமநாதபுரம்.

சமர்ப்பிக்கிறேன் – இன்று 03.03.2025 ஆம்தேதி 22.00 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மு.இராமச்சந்திரன் அவர்கள் 03.03.2025 ம் தேதி 17.25 மணிமுதல் இரவு 21.00 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் உட்கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர், தரக்கட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனை சம்பந்தமான அறிக்கை, பதிவு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

03.03.2025 - 23.00 hrs.

Name: பெயர் ந. ராஜேஸ்வரி,
Rank: நிலை ……………………No. எண் ………

காவல் ஆய்வாளர்,
ஊ.த.க.பிரிவு
இராமநாதபுரம்

**இராமநாதபுரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண் 04/2025 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

செய்யப்பட்ட வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூபாய் 5,60,000/– மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 04/2025 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தம்) சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் பின்வருமாறு, அனுப்புநர் திரு.மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு இராமநாதபுரம். பெறுநர் திரு.ந.இராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். அய்யா, பொருள்: திடீர் சோதனை – 03.03.2025ம் தேதி 17.25 மணிமுதல் இரவு 21.00 மணிவரை இராமநாதபுரம் உட்கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர், தரக்கட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் திடீர் சோதனை நடத்தப்பட்டது – மேல் நடவடிக்கை எடுக்க கோருவது – தொடர்பாக. பார்வை: எனது திடீர் சோதனை அறிக்கை, நாள் 03.03.2025. இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவில் அலுவலக பணியில் இருந்த போது 03.03.2025 ஆம்தேதியன்று 16.00 மணிக்கு இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் உட்கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர், தரக்கட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில பணிபுரியும் உதவி கோட்டப்பொறியாளர் தனக்கு கீழே பணிபுரியும் திரு.சக்கரவர்த்தி என்ற தனிநபர மூலம் அரசாங்கத்தின் பலவேறு சேவைகளை செய்வதற்கு ஒப்பந்ததாரரகளிடமிருந்து தவறான வழியில் லஞ்சமாகப் பணம் வாங்குவதாக இரகசிய தகவல் கிடைத்ததின் அடிப்படையில், 03.03.2025 ஆம்தேதி 17.25 மணிக்கு செயல்முறை நடவடிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் முன்னிலையில் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் உட்கோட்ட

பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர், தரக்கட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை அலுவலகம் சென்று அங்குள்ள அலுவலர்களிடம் அடையாள அட்டைகளை காண்பித்து திடீர் சோதனையின் விபரத்தைக் கூறி திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது இராமேஸ்வரம்– இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் இராமநாதபுரம் பழைய பஸ்நிலையத்திலிருந்து கிழக்கே மெயின் வாசல் தெற்கு பார்த்தவாறு அமைந்துள்ளது. மேற்படி உதவி கோட்டப் பொறியாளர் மற்றும் கோட்டப்பொறியாளர், தரக்கட்டுப்பாடு அலுவலகமானது வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ளது. அதில் நுழைவாயில் ஒரு ஹாலும் அதிலிருந்து இடதுபுறம் ஒரு பெரிய அறையும், அதில் இடது பக்கம் வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ள தரக்கட்டுப்பாட்டு அறையும், மேற்படி பெரிய அறைக்கு தெற்கே உதவி கோட்டப்பொறியாளர் அறையும் அமைந்துள்ளது. அந்த அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் வெளியே செல்லாமலும் வெளியில் இருந்து யாரும் அலுவலகத்திற்குள் உள்ளே வராமல் இருக்கும் வண்ணம் கண்காணிக்க என்னுடன் வந்த போலீஸ் பார்ட்டியினரை நியமித்தேன். மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த உதவி கோட்டப் பொறியாளர் மற்றும் அலுவலர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்ட பின்னர் அரசு சாட்சி திரு.சே.திருப்பதி, செயல் அலுவலர், சாயல்குடி பேரூராட்சி, இராமநாதபுரம் மாவட்டம் என்பவர் முன்னிலையில் சோதனை ஆரம்பிக்கப்பட்டது.

மேற்படி திடீர் சோதனையின் போது, மேற்படி அலுவலக ஹாலில் அமர்திருந்த பின்னர் தெரிந்து கொண்ட திரு.அ.ஜெரோம், வயது 40/2025 த/பெ அடைக்கலம், இளநிலை உதவியாளர் என்பவரை அரசு சாட்சி முன்னிலையில் அவரிடம் ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூபாய் 2/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, அவரது கைச்செலவிற்கு இன்று ரூ.40/– கொண்டு

வந்ததாகவும் அதில் செலவு செய்தது போக ரூ.2/- தன்னிடம் இருப்பதாக கூறியவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, உதவி கோட்டப் பொறியாளர் அறையில் அமர்ந்திருந்த திரு.பெ.இராமலிங்கம், வயது 32/2025 த/பெ பெரியசாமி, உதவி பொறியாளர், என்பவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூபாய் 570/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, அவரது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறியதால் மேற்படி ரூ.570/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் அவரது பேக்கினை சோதனை செய்ய அதில் ரூ.460/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, மேற்படி பணம் அவ்வப்போது செலவு செய்தது போக மீதமுள்ள பணத்தை போட்டு வைத்ததாக கூறினார். மேற்படி ரூ.460/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, உதவி கோட்டப் பொறியாளர் அறையில் அமர்ந்திருந்த திரு.ஆ.அன்பரசு, வயது 31/2025 த/பெ ஆரோக்யசாமி, உதவி பொறியாளர் என்பவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்ச்சில் ரூபாய் 2400/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, அவரது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறியதால் மேற்படி ரூ.2400/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, உதவி கோட்டப் பொறியாளர் அறையில் அமர்ந்திருந்த திரு.ஜெ.ஜெயசக்ரவர்த்தி, வயது 39/2025 த/பெ ஜெயபால், தற்காலிக கணிணி இயக்குபவர் என்பவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் விசாரிக்க, அவர் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் உட்கோட்டம், நெடுஞ்சாலைத்துறை,

தரக்கட்டுப்பாடு உதவிக்கோட்டப்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அலுவலகத்தில் தான் தற்போது இவ்வலுவலகத்தில் தற்காலிக கணினி இயக்குபவராக உதவி கோட்டப்பொறியாளர் மூலம் நியமனம் செய்யப்பட்டு வேலை பார்த்து வருவதாக கூறினார். அவரிடம் ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூபாய் 65/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, அவரது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறியதால் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, உதவி கோட்டப் பொறியாளர் அறையில் அமர்ந்திருந்த திரு.கோ.ரெங்கபாண்டி, வயது 46/2025 த/பெ கோவிந்தன், உதவி கோட்டப்பொறியாளர் என்பவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூபாய் 500/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, தனது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறியதால் மேற்படி ரூ.500/– அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

பின்பு மேற்படி அலுவலகத்தில் பெரிய அறையில் இடது பக்கம் வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ள தரக்கட்டுப்பாட்டு அறையில் கதவின் அருகே இரும்பு தகடுக்கு பின்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ராமநாதபுரத்தின் லேண்ட்மார்க் இலாஹி ஷாப்பிங் மால் என்று பல கலர்களில் அச்சிடப்பட்ட வெள்ளை கலர் துணிப்பையினை அரசுசாட்சி முன்னிலையில் சோதனை செய்ய அதில் ரூ.5,60,000/–(ரூ.500x1220) இருந்தது. மேற்படி பணம் குறித்து உதவி கோட்டப்பொறியாளர் அவர்களிடம் விசாரிக்க, தகுந்த மூகாந்திரம் ஏதும் கூறாததால் மேற்படி பணம் கணக்கில் வராத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது. பின்னர் இவ்வலுவலகத்திற்கு முன்பக்கமாக நிறுத்தப்பட்டிருந்த TN 65 AM 2709, TN 65 R 5373ஆகிய இருசக்கர வாகனமும் TN 63 CY 2466 ஆகிய நான்கு சக்கர வாகனமும் அரசு சாட்சி முன்பு சோதனை செய்யப்பட்டதில் சந்தேகத்திற்கு இடமான எதும் கிடைக்கப் பெறவில்லை.

மேலும், நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, உதவி கோட்டப் பொறியாளர் அவர்களால் ஆஜர்படுத்திய 2025 ஆம் ஆண்டிற்கான வருகைப்பதிவேடு (பக்கம் 1 முதல 39 வரை), கோட்டப் பொறியாளர், தரக்கட்டுப்பாடு ஆய்வு செய்த விபரங்கள் அடங்கிய கோப்பு (பக்கம் 1 முதல் 102 வரை) மற்றும் கணக்கில் காட்ட இயலாத பணம் ரூபாய் ரூ.5,60,000/– ஆகியவை அரசு சாட்சிகள் முன்னிலையில் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இவ்வலுவலகத்தில் கொடிநாள் பதிவேடு மற்றும் பாக்கெட் மணி ரிஜிஸ்டர் ஆகியவை பராமரிக்கப்படுகின்றதா என உதவி கோட்டப் பொறியாளரிடம் கேட்டதற்கு அவைகள் பராமரிக்கப்படவில்லை என விபரம் தெரிவித்தார். மேற்படி திடீர் சோதனை இன்று 03.03.2025ம் தேதி இரவு 17.25 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இச்சோதனையின் போது அனைத்து அலுவலர்களும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர்.

எனவே, இந்த சோதனையின் அடிப்படையில் 1) திரு.கோ.ரெங்கபாண்டி, வயது 46/2025 த/பெ கோவிந்தன், உதவி கோட்டப்பொறியாளர், இராமநாதபுரம் உட்கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர், தரக்கட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை, இராமநாதபுரம் 2) திரு.ஜெ.ஜெயசக்ரவர்த்தி, வயது 39/2025 த/பெ ஜெயபால், தற்காலிக கணிணி இயக்குபவர் (தனிநபர்) ஆகியோர்கள் முறைகேடான செயல்களில் ஈடுபட்டதற்கான முகாந்திரம் இருப்பது தெரிய வருகிறது.

எனவே, மேற்கண்ட இராமநாதபுரம் உட்கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர், தரக்கட்டுப்பாடு, நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், கணக்கில் காட்ட இயலாத மொத்தப் பணம் ரூபாய் 5,60,000/–, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் மற்றும் திடீர் சோதனை சம்மந்தமான எனது அறிக்கை ஆகியவற்றை உடனடியாக வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒப்பம்) மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். 03.03.2025. மேலும், உயர் அதிகாரிகளின் வாய்மொழி ஒப்புதல் பெற்று மேற்படி எதிரிகள் மீது இன்று 03.03.2025ம் தேதி 22.00 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 04/2025 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் அசல், எதிரிகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

3.3.25

Inspector of Police

V&AC Ramnad.